அந்த ஆலைகளை நிறுவுவதற்கு முன்பாக, 'சட்டமன்ற உறுப்பினர் அவர்களே, இந்த ஆலைகள் நிறுவுகின்ற வேலைகள் முடிந்தவுடன் தொகுதியிலேயுள்ள படித்த மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வேலைவாய்ப்பு வழங்குவோம்' என்று சொன்னார்கள். இப்போது ஆலைகளும் வந்து, வேலைகளும் தொடங்கப்பட்டு விட்டன. இப்போது நாங்கள், 'என்ன சார், தொகுதியிலுள்ள படித்த இளைஞர்களுக்கு வேலை வழங்குங்கள்' என்று கேட்டபோது, அவர்கள் சரியான பதிலைச் சொல்லாமலே தட்டிக்கழித்து வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனைக் கருத்தில் கொண்டு, நாகை தொகுதி வாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்பட நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், யாரிடத்தில் என்ன பேசினார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை கொடுத்தால், சம்பந்தப்பட்ட நிறுவன அதிகாரிகளை அழைத்துப் பேசி, தகுந்த முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 215, திரு. பி. வி. இராஜேந்திரன் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

215—

சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு டெரிக்காட்டன் சீருடை இலவசமாக வழங்குதல்

*** 22768**—*திரு. பி. வி. இராஜேந்திரன்:*

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு இப்போது வழங்கப்படும் பருத்தித் துணியைத் தவிர்த்து டெரிக்காட்டன் துணியில் இலவச சீருடை வழங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பருத்தித் துணியைத் தவிர்த்து டெரிக்காட்டன் துணி கொடுக்கப்படுமா என்ற கேள்விக்கு, இல்லை என்கிற பதிலைத் தந்து இருக்கிறார்கள். இப்போது கொடுக்கப்படுகிற

பருத்தித் துணி, சில நேரங்களிலே இரண்டு மூன்று சலவைக்குக்கூட வருவதில்லை. ஆகவே, டெரிக்காட்டன் துணி கொடுத்தால் ஒரு ஆண்டுக்காவது நிச்சயமாக அது தொடர்ந்து இருக்கக் கூடிய வாய்ப்பு உண்டு. அதை அரசு பரிசீலிக்குமா? இல்லை என்று சொன்னால், ஒருவேளை நீங்கள் அதற்குக் கொடுக்கக் கூடிய தொகையையே அந்தக் குழந்தைகளுடைய பெற்றோர்களிடம் பணமாகத் தந்து விடுவீர்களேயானால், அவர்களே சரியான அளவில் தைத்துப் போடக்கூடிய ஒரு வாய்ப்பு உண்டு. கொடுக்கப்படக்கூடிய துணிகளெல்லாம் அளவு சரியில்லாமல் கொடுத்து, போட முடியாமலேயே போய் விடுகிறது. ஆகவே, அரசு இந்தத் துணிக்குக் கொடுக்கக்கூடிய தொகையை, அதாவது பணத்தை, அந்தக் குழந்தைகளுடைய பெற்றோர்களிடமே வழங்க முன் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தித் துணியில் சீருடை தைப்பதற்கு ஆண்டுதோறும் 25 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. இதை டெரிக்காட்டனிலே கொடுக்க வேண்டும் என்றால் இதைப்போன்ற செலவு இரட்டிப்புத் தொகையாக, அதிகமாக வரும். இன்றைக்கு இருக்கிற நிதிநிலை நெருக்கடியில் இதைப்பற்றிப் பரிசீலிக்கவே இயலாது. இரண்டாவது, பருத்தித் துணிதான் உடலுக்கு நல்லது. குழந்தைகளுக்கு வியர்வை வருகிறபோது, டெரிக்காட்டன் துணியால் அதை இழுக்கவே முடியாது. அதனால் நோய்கள் பரவுவதற்குரிய வாய்ப்புகள் இருக்கும். பருத்தித் துணி உடலுக்கு மிகவும் நல்லது என்கின்ற காரணத்தினால் இதை அளிக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவதாக, குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற துணிகளினுடைய அளவு சரியில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால், அந்தக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற துணிகள் மிகவும் தரம் வாய்ந்த, பருத்தித் துணிகளிலேயே தரம் வாய்ந்த துணிகளாகவும் அதைப்போல, சரியான அளவுடைய துணிகள் கொடுக்கப்படுவதாகவும் அந்தக் குழந்தைகளுடைய தாய்மார்களே பாராட்டி இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பிறந்ததால் தமிழக மக்கள் நலமுடன் இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த நாளான பிப்ரவரி 24-ஆம் தேதியை முன்னிட்டு, சத்துணவு உண்ணும், வறிய நிலையில் உள்ள பெற்றோர்களின் குழந்தைகளுக்கு 2 செட் டெரிக்காட்டன் சீருடை, ஆண்டுக்கு ஒரு முறை கொடுக்க டாக்டர் புரட்சித் தலைவி

அரசில், மிக, மிகக் கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற நிதி நெருக்கடி நிலையில் இதுபற்றிப் பரிசீலிக்க இயலாது. ஆனால் கழகத்தின் சார்பாகக் கொடுப்பதற்கு, அந்தந்தப் பகுதியிலே இருக்கிற அண்ணா திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் இதற்குப் பணியாற்றலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் குழந்தைகளுக்கு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், வருடத்திற்கு எத்தனை ஆடைகள் வழங்கப்படுகின்றன என்கின்ற கணக்கையும், அதேநேரத்திலே அந்தக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற ஆடைகள் எவ்வளவு தரமுள்ளவை என்பதைப் பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காக்கித் துணி 24,84,132 மீட்டர் வழங்குகின்றோம். நீல நிறப் பாவாடை 41 இலட்சம் மீட்டர் வழங்குகிறோம். அதைப் போல, வெள்ளைத் துணி 41 இலட்சத்து 38 ஆயிரத்து 16 மீட்டரும்,. இவை அனைத்தும் பின்னியில் வழங்கப்படுகின்றன. கோவாப்டெக்ஸில் வெள்ளைத் துணி 41 இலட்சத்து 38 ஆயிரத்து 16 மீட்டர் என்கின்ற அளவிலும், நீல நிறப் பாவாடை 14 இலட்சம் மீட்டர் என்கின்ற அளவிலும் வழங்கப்படுகிறது.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: தமிழ்நாடு துணி நூல் நிறுவனத்தின் வெள்ளைத் துணி 13 இலட்சத்து 21 ஆயிரத்து 984 மீட்டர்-ம், தாவணித் துணி 6 இலட்சத்து 17 ஆயிரத்து 748 மீட்டர்-ம் வழங்கப்படுகின்றன.

காதி நிறுவனத்தின் மூலமாகத் தாவணித் துணி 4 இலட்சம் மீட்டர் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஏழைக் குழந்தைகளுக்கு—சத்துணவு சாப்பிடுகின்ற குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்குவதே கிராமத்தில், மகாத்மா காந்தி அவர்கள்

1994 ஏப்ரல் 6]

உடலிலே இடுப்பளவில் ஒரு வேட்டி உடுத்திக் கொண்டு மேலுக்கு—உடம்புக்குச் சட்டையில்லாமல் இருந்தாரே அது போல வாழ்கின்ற சமுதாயத்தில் பின்தங்கிய கிராமப்பகுதி மக்களுக்குத் தான் அவர்களுடைய குழந்தைகளுக்கு இந்த உடை வழங்கப்படுகிறது. அப்படிக் கிராம இராஜ்யம் வேண்டும் என்று விரும்புகின்ற அந்தக் கொள்கையைப் பின்பற்றுகின்ற மத்திய அரசாங்கம் நம்முடைய மாநில சர்க்காருக்கு இந்த இலவச சீருடை வழங்குவதற்கு ஏதேனும் நிதியுதவி அளிக்கிறதா? நம்முடைய அரசு அதைக் கேட்டிருக்கிறதா? அல்லது இந்தச் சத்துணவுக்கு என்று ஒட்டுமொத்தமாக 200 கோடிக்கு மேல் செலவாகிறதே, இதில் ஒரு பாதியளவாவது மத்திய அரசாங்கம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க மாநில அரசு விரும்புமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சீருடை வாங்குவதற்கு எந்தவிதமான நிதியுதவியும் கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதவில்லை. முழுக்க முழுக்க மாநில அரசே இதற்குச் செலவு செய்கிறது. அதைப்போல, சத்துணவுத் திட்டத்திற்குச் செலவழிக்கின்ற அனைத்துத் தொகையும் மாநில அரசாலே தான் செலவழிக்கப்படுகிறது. மத்திய அரசு அதற்கு எந்தவிதமான நிதியுதவியும் தரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது வரலாற்றுச் சிறப்புமிக்க டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசின் காலத்தில்தான் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிகமான அளவிலே இந்த யூனிபார்ம்களும், துணிகளும் தைத்துக் கொடுக்கப்படுகின்றன. அந்த அளவுகளைச் சரியானபடி கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு சூப்பர்வைசரைப் போட்டு அந்தக் குழந்தைகள் சரியான அளவிலே போட்டு, நல்லபடியாக நடந்து வந்தால் நன்றாக இருக்கும். சட்டை குறைவாகவும், டிரவுசர் அளவு குறைவாகவும் இருப்பதைக் கண்டறிய சூப்பர்வைசர் போட்டு அவர்கள் தேர்வு செய்தால் நன்றாக இருக்கும் என்ற காரணத்தினால் அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமூக நலத் துறையின் கீழ் இயங்குகின்ற தையல் சொசைட்டிகளில், ஒவ்வொரு சொசைட்டியிலும் 300 பெண்கள், 400 பெண்கள் என்று கூட்டுறவு சொசைட்டிகளாக அமைத்துக்கொண்டு அவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க வேண்டும் என்கின்ற அடிப்படையில், பெண்கள் வேலையைப் பெற வேண்டும் என்கின்ற அடிப்படையில் இந்தச் சீருடைகளைத் தைப்பதற்கு அந்த சொசைட்டிகளுக்கு நாம் துணிகளை வழங்குகிறோம். இந்த சொசைட்டிகளில்

அதிகமான - கணவனாலே கைவிடப்பட்ட பெண்கள், விதவைத் தாய்மார்கள் இருந்து பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கு மேலே ஒரு ஐ.சி.ஓ. இருக்கிறார்; ஒரு சூப்பர்வைசர் இருக்கிறார்; இதைக் கண்காணிப்பதற்கு சமூக நலத் துறை அதிகாரி இருக்கிறார். ஏறக்குறைய 70 இலட்சம் குழந்தைகள் சத்துணவைச் சாப்பிடுகின்ற காரணத்தினால் அந்தக் குழந்தைகளுக்கு வழங்குகின்ற இந்தச் சீருடைகளில் எங்கேயாவது இப்படி அளவுக் குறைவு என்ற குறைகள் ஏற்பட்டால் அதை நேரிடையாக அந்தந்தப் பகுதியிலேயிருப்பவர்கள் அந்தத் தையல் சொசைட்டியினுடைய சூப்பர்வைசரிடம் தெரிவித்தாலே போதுமானது. அதற்குரிய வழிவகை செய்யப்படும். ஆனால் 70 இலட்சம் குழந்தைகளுக்கும் அளவெடுத்துத் தைப்பது என்பது சிரமமான காரியம் தான். அதைச் சமூக நலத் துறையினுடைய சொசைட்டிகள் செய்து கொண்டிருப்பதால் எங்கே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுகிறதோ அதை அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் தெரிவித்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜூ.

திரு. கே. பி. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 இலட்சம் குழந்தைகளுக்குச் சீருடைகளைப் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சீருடைகளை சமூக நலத் துறையின் கீழ் இருக்கின்ற அனாதைப் பெண்கள், விதவைகள் மற்றும் அவர்கள் வைத்திருக்கின்ற சொசைட்டிகள் மூலமாகக் குழந்தைகளுக்குத் தைத்துத் தருகிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கே. பி. ராஜூ: அது அளவு வித்தியாசமாக இருக்கின்ற காட்சியை ஒருசில இடங்களில் பார்க்கிறோம். ஆகவே, சமூக நலத் துறையின் மூலமாக அந்தந்தக் குழந்தைகள் படிக்கின்ற பள்ளியின் ஆசிரியர்களிடமே அளவுகளை எடுத்து அந்த சொசைட்டிகளுக்குக் கொடுத்துவிட்டால் அந்த உடை தைப்பதற்கு அளவும் சரியாக இருக்கும்; பார்ப்பதற்கும் அழகாக இருக்கும். ஆகவே, இலட்சக்கணக்கான தாய்மார்கள் வேலை செய்கின்ற இந்த நிறுவனத்தில் அளவெடுப்பது ஒன்றும் அவ்வளவு சிரமமாக இருக்காது. ஆகவே, ஆசிரியர் மூலமாக அளவெடுத்து, அந்தக் குழந்தைகளுக்குத் தைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே இருக்கிற ஆசிரியர்கள், பல்வேறு பணிகளை காலையிலே இருந்து செய்து கொண்டிருக்கிற காரணத்தினால், அவர்கள் இதற்காக நேரத்தை ஒதுக்கினால், குழந்தைகளினுடைய படிப்பு வீணாவதற்குரிய காரண, காரியங்கள் ஏற்பட்டுவிடும். ஆகவே,

அப்படிப்பட்ட முயற்சிகள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எந்த இடத்தில் இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன எனத் தெரிவித்தால்—அந்த இடத்தில் ஒரு பொதுவான அளவை எடுத்து, அந்தந்த வயதிலே உள்ள குழந்தைகள் இந்த அளவுதான் இருக்கும் என்ற அடிப்படையில் தைத்துக் கொடுக்கிறார்கள்; சில குழந்தைகள் குண்டாகவும், சில குழந்தைகள் ஒல்லியாகவும் இருப்பதால், இப்படிப்பட்ட வேறுபாடுகள் ஏற்படும்; ஆகவே, அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னால்—நிச்சயமாக அந்தக் குறைகள் களையப்படுவதற்கு வழிவகைகள் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவிற்கு மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஐ.சி.டி.எஸ். என்ற திட்டத்தின்கீழ், நம்முடைய மாநில அரசுக்கு, குழந்தைகள் சத்துணவிற்காக நிதி வழங்கப்படுகிறது என அறிகிறேன். அதைப்பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.சி.டி.எஸ். என்பது வேறு; குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிற, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்பது வேறு. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கு, எந்தவிதமான நிதியுதவியும் மத்திய அரசால் வழங்கப்படுவதில்லை. ஐ.சி.டி.எஸ். நம்முடைய தமிழகத்திலே 111 பிளாக்குகளிலேதான் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு, அதை சத்துணவுத் திட்டம் என்று சொல்லிவிட முடியாது. 111 பிளாக்குகளிலேதான் அந்தக் குழந்தைகள் சாப்பிடுகிறார்கள். மேலும், அவற்றிற்கான சம்பளத்திற்கு மட்டும்தான் மத்திய அரசு தருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறதேயொழிய, உணவுக்குரிய தொகைகள் அனைத்திற்கும் மாநில அரசுதான் வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் 111 பிளாக்குகளிலேதான். ஆகவே, ஐ.சி.டி.எஸ். என்பது வேறு; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்பது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர். வினா எண் 216, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. மு. வெங்கடராம ரெட்டி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

216—

ஒசூரில் உயிரியல் பூங்கா (Zoo) அமைக்கும் திட்டம்.

*** 14683—திரு. கே. ஏ. மனோகரன்:**

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—